# மென்தமிழ்

கணித்திரையில் இனித்தமிழ்

இணைய இதழ் புரட்டாசி 2008





## ஆசிரியர்கள்

**நிலாரசிகன்**

www.nilaraseeganonline.com

nilaraseegan@gmail.com

**விழியன்**

www.vizhiyan.wordpress.com

vizhiyan@gmail.com

**ரசிகவ் ஞானியார்**

www.nilavunanban.blogspot.com

rasikow@gmail.com

**சிவா**

www.srishiv.blogspot.com

sivasankar.iitg@gmail.com

**எழிலன்பு**

indrapathy@gmail.com

## ஆலோசனை

**மஞ்சூர் ராசா**

sundarnb@gmail.com

## வடிவமைப்பு

**ஜே.சையத் அலி**

www.4creativeweb.com

jsyedali@gmail.com

கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. கதை கட்டுரைகளை திருத்தி அமைக்கவும் சுருக்கவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

படைப்புகளை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி:

mentamil@gmail.com

| | | |
|---|---|---|
| **தலையங்கம்** | ரசிகவ் ஞானியார் | பக் 4 |
| **சப்தமிடும் நிசப்தங்கள் - கவிதை** | லஷ்மி சாகம்பரி | பக் 5 |
| **வின்டோஸில் ஒரு லீனக்ஸ் இன்ஸ்டாலர்! – கட்டுரை** | அமிர்தராஜ் | பக் 6 |
| **அடுத்த நிமிடம் -கவிதை** | சகாராதென்றல் | பக் 8 |
| **வெப்கேமிரா விபரீதம்** | ரசிகவ் ஞானியார் | பக் 9 |
| **காட்சியாய் வாழ்தல்** | சித்தார்த் | பக் 12 |
| **அப்துல் ஜப்பார் அய்யாவுடன் ஒரு சந்திப்பு** | | பக் 18 |
| **அப்பனாத்தா நீதான் -கவிதை** | ஒளியவன் | பக் 25 |
| **நனைதலின் தேடல் - கட்டுரை** | லாவண்யா | பக் 27 |
| **காந்தி புன்னகைக்கிறார் - சிறுகதை** | விழியன் | பக் 30 |
| **பேருந்து நிலைய பகலொன்றில்... – கவிதை** | நிலாரசிகன் | பக் 34 |
| **வல்லுனர் குறிப்புகள்** | விழியன் | பக் 35 |
| **புகைப்பட கவிதை போட்டி** | | பக் 36 |
| **கிழவனும் கடலும் - நூல் விமர்சனம்** | நிலாரசிகன் | பக் 37 |
| **தொடரும் - சிற்றிதழ் அறிமுகம்** | க. அம்சப்ரியா | பக் 39 |

டீக்கடை பெஞ்சு – சலூன் கடை காத்திருப்பு – தெரு முனை நண்பர்கள் என்று எல்லா இடத்திலும் அந்தப் பெயர்தான். இந்தியர்கள் அனைவர் முகத்திலும் ஒரே நாளில் பிரகாசம் ஏற்றிய பெயர்

## அபினவ் பிந்த்ரா...

என்ன போட்டி எப்படி ஜெயித்தார் எந்த மாநிலம் என்றெல்லாம் எவருமே யோசிக்கவில்லை. தங்கம் வென்றார் என்ற செய்தியை கேட்டவுடன் தங்கள் வீட்டு மகன் வெற்றிபெற்றதைப்போல ஒவ்வொருவர் முகத்திலும் அத்துணை சந்தோஷம்.

இந்த மகிழ்ச்சிக்கு நடுவிலும் வேதனையான விசயம் 100 கோடி மக்களில் இருந்து 1 தங்கமும் 2 வெண்கலமும் மட்டும் வென்றது. நேற்று முளைத்த நாடுகள் கூட தங்களின் பதக்கங்களை எண்ணிக்கொண்டிருக்க நாம் மட்டும் நம் நாடு பட்டியலில் இருக்கின்றதா என்று தேடிக்கொண்டிருக்கின்றோம்.

அரசியல் தலையீடுகள் இல்லாமல் திறமையானவர்களைக் கண்டறிந்து ஊக்கம் கொடுத்து ஒலிம்பிக் போட்டிக்கான உற்சாகத்தையும் உத்வேகத்தையும் இனி வரும் நாட்களிலாவது அரசு அதிகப்படுத்தினால் இந்தியாவும் பதக்கங்களை எண்ணிக்கொண்டிருக்கும்.

சூரியனின் ஒளியை விடவும் மிகவும் வேகமாக தகவல் தொடர்பு இருப்பதை அந்த மின்னஞ்சல்தான் நிரூபித்தது. “மென்தமிழ்” ஆகஸ்ட் மாத இதழை அனுப்பிய 1 மணி நேரத்திற்குள் “பிஞ்சு கரங்களில் தாய்மை” என்கிற கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள குழந்தையின் எதிர்காலத்திற்கு உத்தரவு தருகின்ற நம்பிக்கையான வார்த்தைகள் எங்களுக்கு வந்து சேர்ந்தன.

அந்த கட்டுரையை எழுதிய மங்கைக்கும் அந்த குழந்தைக்கு உதவுவதாக உறுதியளித்தவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகள்.

நம் உடலில் இருக்கும் சக்தியையும் நமக்கு வாழ்க்கையில் கிடைத்த அனுபவத்தையும் மற்றவர்களுக்காக செலவழிப்பது ஆத்மதிருப்தியான காரியம் என்று சத்குரு ஜக்கி வாசுதேவ் சொன்னது போல இந்த மின்னூல் ஆரம்பித்ததன் நோக்கம் நிறைவேறிக்கொண்டு இருக்கின்றது என்கிற ஆத்ம திருப்தி எங்களுக்குள் வியாபித்திருக்கின்றது.

இந்த முயற்சிக்கு எங்களை ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கும் வாசகர்களுக்கும் வழிநடத்தும் நண்பர்களுக்கும் மிக்க நன்றி.

மென்தமிழ் ஆசிரியர் குழு சார்பாக

மென் தமிழ் ஆசிரியர் குழு சார்பாக

**ரசிகவ் ஞானியார்**
rasikow@gmail.com

## சப்தமிடும் நிசப்தங்கள்

நிசப்தமாய் நின்றிருந்த நீர் பரப்பில்
கற்களை எறியத் துவங்கினேன்
முற்றிலும் எதிர்பாராத சலனங்கள் ...

வளர்தலை மட்டுமே பறைசாற்றப் பிறந்த வட்டங்கள்
அவற்றினூடே பிம்பமாய் நானும் வளர்கிறேன்
சின்னக் குழந்தையின் குதூகலத்தை ஒத்த நீர்த்திவலைகள்
அசைந்திராத எல்லாமும் அசைகிறது
குறுகிய எல்லாமும் வளர்கிறது.

எனினும்
வளர்ந்த எதுவும் மேலும் வளரவில்லை
தேய்தலுக்கு உட்படவும் இல்லை
இறத்தலை ஒத்த பிரிதல்
மீண்டும் நிசப்தம் ...

இம்முறை நேர்ந்த
நிசப்தம் கொடியதாய் தோன்றியது
நான் ஏற்படுத்த விழைந்த சலனத்தின் பிரிவு
நீர்பரப்பை கொஞ்சம் கொஞ்சமாய் தின்னத்தொடங்கியது ...

அவசியமற்றதாகத் தோன்றியது என் செயல்
நிகழாமை நிகழ்ந்திருக்கலாம்
உன்னில் வாழ்ந்த அதே குரூரம் இப்பொழுது என்னிலும் ..
நீர்பரப்பை ஒத்திருக்கிறது என்நெஞ்சம்.

லஷ்மி சாகம்பரி
n.lakshmisahambbari@gmail.com

## வின்டோஸில் ஒரு லீனக்ஸ் இன்ஸ்டாலர்!

**உபண்டு லீனக்ஸ்**

உபண்டு என்பது இலவசமாக கிடைக்கக் கூடிய லீனக்ஸ் ஆபரேட்டிங் சிஸ்டம்களில் ஒன்று. உபண்டு இலவசமாக கிடைப்பது மட்டுமன்றி அவ்வப்பொழுது மேம்படுத்தப் படுவதால், தரமான ஒரு லீனக்ஸ் வெளியீடாகவும் விளங்குகிறது. அதனாலேயே கணினி ஆர்வலர் பலராலும் லேப்டாப்பிலும், டெஸ்க்டாப்பிலும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

**விண்டோஸ் + லீனக்ஸ்**

விண்டோஸ் உபயோகித்து பழக்கப்பட்டவர்கள் தங்களது கணினியில் லீனக்ஸ் நிறுவும் பொழுது விண்டோஸை நீக்காமல் அப்படியே லீனக்ஸையும் சேர்த்து நிறுவுதலையே விரும்புகிறார்கள். சாதாரணமாக லீனக்ஸ் ஆபரேட்டிங் சிஸ்டத்தை விண்டோஸ் உள்ள கணினியில் நிறுவ வேண்டுமென்றால் அதற்கென தனி பார்டிஷனில் நிறுவி, டூயல் பூட் செய்யுமாறு அமைக்க வேண்டும். உபயோகப்படுத்திப் பார்த்து விட்டு பின் லீனக்ஸ் வேண்டாம் என்றால் அதை நீக்குவதற்கும் பார்டிஷனில் கை வைக்க வேண்டும். சமயத்தில் விண்டோஸையும் திரும்ப நிறுவ வேண்டியிருக்கும். “லீனக்ஸ் எப்படித்தான் இருக்கிறதென்று பார்ப்போமே..” என்று சோதித்து பார்க்க வேண்டுமென நினைக்கும் பொது ஜனத்திற்கு, இதெல்லாம் வேண்டாத வீர விளையாட்டாக தோன்றும்.

**லைவ் சி.டி.**

லீனக்ஸில் லைவ் சி.டி என்பது, லீனக்ஸை நிறுவாமலேயே பூட்டபிள் சி.டி. டிரைவிலிருந்து அப்படியே இயக்க வல்ல ஒரு வெளியீடாகும். நாப்பிக்ஸ் லைவ் சி.டி. ஒரு பிரபல லைவ் சி.டி. வெளியீடாகும். உபண்டுவிலும் லைவ் சி.டி. வெளியீடு உள்ளது. ஆனால் லைவ் சி.டி உபயோகப்படுத்திய பலரும் அதனை எப்பொழுதாவது ஒரு சில சமயம் உபயோகப்படுத்த சரியே தவிர தினந்தோறும் உபயோகப் படுத்த, ஹார்ட் டிஸ்க்கில் நிறுவப்பட்டது போல் சகஜமாக உபயோகிக்க முடிவதில்லை என்று உணருகின்றனர்.

நம்முடைய தனிப்பட்ட செட்டிங்குகள் நிலைத்திருக்க வேண்டுமென்றால், ஒவ்வொரு முறை பூட் செய்யும் பொழுதும் பெர்சிஸ்டன்ட் செட்டிங்-ஐ லோடு செய்ய வேண்டியிருத்தல், சி.டி. டிரைவ்

ஆக்கிரமிக்கப்படுதல், சி.டி. கீறல் விழுந்து சரியாக இயங்காமல் நாம் வேலை செய்யும் பொழுது பாதியில் நின்றுபோதல் ஆகிய பிரச்சினைகளே இதற்கு காரணம்.

**விண்டோஸ் உபண்டு இன்ஸ்டாலர்! – எக்ஸ்பி**

சாதாரண பொது ஜனமும் நினைத்த பொழுது லீனக்ஸை நிறுவவும் நீக்கவும் என்ன செய்வது? உபண்டுவின் **எக்ஸ்பி** இதற்கு ஒரு சரியான தீர்வாகும். விண்டோஸில் இருந்து கொண்டே உபண்டு லீனக்ஸை நிறுவவும், தேவையில்லை என்றால் பின் நீக்கவும் ஒரு விண்டோஸ் இன்ஸ்டாலரை தயாரித்து உள்ளனர் உபண்டு தயாரிப்பாளர்கள்.




இந்த இன்ஸ்டாலர், பயனாளரிடம் மிகக் குறைந்த எண்ணிக்கை கேள்விகளையே கேட்டு பின் தானே உபண்டுவை நிறுவி விடுகிறது.



இதில் உபண்டு ஒரு தனி டைரக்டரியிலேயே நிறுவப்படுகிறதால் ஹார்ட் டிஸ்க் பார்டிஷனில் மாற்றம் செய்யத் தேவை இல்லை. வேண்டாம் என்று இதை நீக்குவதும் சுலபம். விண்டோஸில் இருந்தே இதை இலகுவாக நீக்கலாம்!

இனி எல்லோரும் லீனக்ஸை ஒரு கை பார்க்கலாம்!

பி.கு. இது கிடைக்குமிடம் இங்கே - http://www.wubi-installer.org

(உபண்டு சிடியினை இந்த தளத்தில் சென்று நீங்கள் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். www.ubuntu.com - 6 வாரத்தில் உங்கள் வீட்டிற்கே சிடியை அனுப்பி விடுவார்கள். தபால் செலவு உட்பட அனைத்தும் இலவசமே.)

அமிர்தராஜ்
http://kaniththuli.wordpress.com

## அடுத்த நிமிடம்

கவனமாயிருக்க வேண்டியுள்ளது
நிமிடங்கள் கடந்து செல்லும்
ஒவ்வொரு முறையும்..

அயர்வு
ஆங்காரம்
அடர்தனிமையென
பயணப்படுமதன் கரங்களில்
எப்போதும் முட்கள்
சிலபோது மலர்கள்

தப்பித்தலின் எத்தனங்கள்
தவறுகையில்
எதிர்கொள்ளவியலாமல் போகலாம்
இவையேதும் செய்திராத
அடுத்த நிமிடத்தை..

சகாராதென்றல்
saharathendral@gmail.com

## வெப்கேமிரா விபரீதம்

வெப்கேமிரா வசதியுடன் இணையத் தொடர்பு உள்ள கணிப்பொறி உங்களிடம் இருக்கின்றதா?

எச்சரிக்கையாக இருங்கள் உலகின் எந்த மூலையிலிருந்தோ நீங்கள் கவனிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். தன்னுடைய அறையில் தான் உடைமாற்றிய காட்சி எந்த ஆபாச இணையதளத்திலோ விற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதைக் கேட்ட அவள் அதிர்ந்துதான் போனாள்.

யாரும் அத்து மீறி அந்த அறைக்குள் நுழையவில்லை? எவருக்கும் மின்னஞ்சல் வழியாகவும் எந்த புகைப்படமோ வீடியோக் காட்சிகளோ அனுப்பவில்லை? பின் தன்னுடைய படுக்கை அறைக்காட்சியை படம்பிடித்தது யார்? அது எப்படி சாத்தியமாயிற்று?

புனேயில் உள்ள Asian School of Cyber Law வில் புகார் அளித்தாள். அவர்கள் சொன்ன காரணம் அவளை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆம் அவளது அறையில் உள்ள வெப்கேமிராதான் அவளை படம்பிடித்திருக்கின்றது. செய்வதையெல்லாம் செய்துவிட்டு ஒரு ஓரத்தில் அப்பாவியாய் அமர்ந்திருந்திருக்கிறது அந்த வெப்கேமிரா.

ஆம் நம்புங்கள் அவள் அறையில் உடைமாற்றுவதையும் அவளின் அந்தரங்கங்களையும் படம்பிடித்தது அந்த வெப்கேமிராதான். மீடியாத்துறையில் பணிபுரிகின்ற அந்தப் பெண்ணின் பெயர் அனி ஜோலகர் (பெயர் மாற்றப்பட்டுள்ளது). தனது ப்ராஜக்ட்டுக்காக சில படங்களை இணையத்திலிருந்து டவுன்லோடு செய்திருக்கின்றாள். ஆனால் அவளுக்குத் தெரியாமலையே கணிப்பொறியில் ட்ரோஜன் என்கிற வைரஸ் அல்லது புரோகிராம் வந்து அமர்ந்து கொண்டது

அந்த ட்ரோஜன் என்கிற புரொகிராமின் மூலம் அவளது கணிப்பொறியில் இணைக்கப்பட்டுள்ள வெப்கேமிராவை ரிமொட் முறையில் இயக்கி அவளது அந்தரங்களை படம்பிடித்து அவற்றை ஆபாச இணையதளத்திற்கு விற்றுக் கொண்டிருந்திருக்கின்றான் எவனோ ஒருவன். உலகத்தின் இன்னொரு மூலையில் தனது நிர்வாணப்படங்களும் அந்தரங்கங்களும் திரைப்படமாக்கப்படுகின்றதை அறிந்து அதிர்ச்சியானாள் அனி ஜோலகர்.

இணையத் தொடர்புடன் உள்ள அந்த கணிப்பொறியின் வெப்கேமிராவை பெரும்பாலும் அவள் ஆன் செய்தே வைத்திருக்கின்றாள்.

இணையத்தில் உலவிவிட்டு அணைக்காமல் அப்படியே இருந்துவிட்டதுதான் அவள் செய்த தவறு. கணிப்பொறி இடப்பெயர்ச்சி இல்லாமல்தானே அமர்ந்திருக்கின்றது அதுவென்ன செய்திட முடியும் என்று நீங்கள் சாதாரணமாய் இருந்துவிடமுடியாது. புரிந்து கொள்ளுங்கள் அது நம்மை நோட்டமிட்டுக்கொண்டிருக்கின்றது வெப்கேமிரா மூலம். கொஞ்ச நேரம் கழித்து உபயோகிக்கத்தானே போகின்றோம் அதற்குள் எதற்கு இணையத்தொடர்பை துண்டிக்கவேண்டும் என்று அலட்சியப்படுத்தினால் நம் அந்தரங்கங்கள் உலகத்தின் பார்வைக்கு வந்துவிடும்.

“தங்களது அறையினில் வெப்கேமிராவை வைத்திருப்பவர்கள் மிகவும் கவனமாய் இருக்கவேண்டும். அந்தரங்க விசயங்களின் பொழுது இணையத் தொடர்பு அவசியம் இல்லையெனில் அதன் இணைப்பையும் வெப்கேமிராவின் இணைப்பையும் துண்டித்துவிடுங்கள். இந்த விழிப்புணர்வினை தங்களுக்கு தெரிந்தவரையிலும் மக்களுக்கு தெரியப்படுத்தினால்தான் அவர்கள் விழிப்புணர்வு அடைவார்கள்”

- ரோகஸ் நாக்பால், ப்ரசிடண்ட் ஆப் ஆசியன் ஸ்கூல் ஆப் சைபர் லா

“தேவையில்லாமல் வெப்கேமிராவை ஆன் செய்து வைத்திருப்பது அல்லது அதன் தேவைகள் இல்லாவிட்டாலும் அதனை கணிப்பொறியுடன் இணைத்து வைத்திருப்பது மிகவும் ஆபத்தானது. நிறைய பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட பெண்கள் நிறையபேர் சமூக சூழலுக்குப் பயந்து அதனை புகார் தெரிவிக்காமல் இருப்பது மிகவும் பரிதாபத்திற்குரியது.”

- விஜய் முகி – கணிணித்துறை வல்லுனர்

இணையத்தில் இருந்து படங்களோ அல்லது வேறு சில பைல்களோ டவுண்லோடு செய்யும்பொழுது ட்ரேஜன் ஹார்ஸ் (Trojan horse) என்கிற வைரஸ் அல்லது வேறு ஏதேனும் வைரஸ் நுழையாமல் பார்த்துக்கொள்ளுங்கள். அதற்குத் தேவையான ஆன்டி வைரஸ் புரோகிராம்களை இன்ஸ்டால் செய்துகொள்ளுங்கள்.

அது மட்டுமல்ல தேவையில்லாத அல்லது கவர்ச்சியான விளம்பரங்களுடன் வருகின்ற மின்னஞ்சல்களையும் தவிர்த்து விடுங்கள்.

ஆகவே நண்பர்களே கணிப்பொறி உபயோகிக்காத நேரங்களில் அதனை அணைத்துவிடுங்கள். தங்களது அந்தரங்க விசயங்களின் பொழுது இணையத்தொடர்பும் வெப்கேமிரா தொடர்பும் துண்டிக்கப்பட்டிருகின்றதா என்று தயவுசெய்து ஒன்றுக்கு இரண்டுமுறை சரிபார்த்துக்கொள்ளுங்கள்.

இணையத்தில் உலவும்பொழுது மட்டும் இணையத்தொடர்பினை இணைத்துவிட்டு மற்றநேரங்களில் அந்த தொடர்பினை கணிப்பொறியிலிருந்து எடுத்துவிடுங்கள். அதுபோலவே வெப்கேமிராவும். யாருடனும் அவசியம் என்றால் மட்டும் அதனை இணைத்துக் கொள்ளுங்கள். மற்ற நேரங்களில் அவற்றை கணிப்பொறியுடன் இணைக்காமலேயே வைத்திருங்கள்.

இல்லையென்றால் உங்களுக்குத் தெரியாமலேயே நீங்கள் படம் எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பீர்கள். அந்த நபர் உங்களுக்கு பக்கத்து அறையில் அல்லது பக்கத்து கண்டத்தில் கூட இருக்கலாம்.

ரசிகவ் ஞானியார்
rasikow@gmail.com

## காட்சியாய் வாழ்தல்

“கார்னகி மெலன் பல்கலைக்கழக நண்பர்கள், நமது தேவாலயம், உற்றார் உறவினர் அனைவருக்கும் நன்றி கூறி முடிக்கிறேன். நீங்கள் செய்த அனைத்திற்கும் கடமைப்பட்டுள்ளோம். இந்த கதைக்கு சுகமான முடிவு இல்லை, மன்னிக்க வேண்டும்.”

- ராண்டி பாஷ் [Randy Pausch] (ஆகஸ்ட் 27, 2007).



ராண்டி பாஷ் - குடும்பத்துடன்

கார்னகி மெலன் பல்கலைக்கழக பேராசிரியரான ராண்டி பாஃக்கு கணைய புற்றுநோய் இருப்பது 2006ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தெரிந்தது. அதற்கு முன் ராண்டி ஒரு பேராசிரியர், விர்ச்சுவல் ரியாலிட்டியில் உலகறிந்த ஆளுமை, கார்னகி மெலன் பல்கலைக்கழகத்தின் விர்ச்சுவல் ரியாலிட்டி பாட திட்டத்தை வகுப்பதில் முக்கிய பங்கு வகித்தவர், ஆலிஸ் என்ற மென்பொருளின் உருவாக்க குழுவை கட்டமைத்துக்கொண்டிருந்தவர்.

ராண்டி பாஷ் சென்ற மாதம் (ஜூலை 25, 2008) இறந்துவிட்டார். மீள்பார்வையில் ஒன்று தெரிகிறது. இன்று ராண்டியின் சாதனைகள் அனைத்தும் (ஒன்றை தவிர) அவரது புற்றுநோய்க்கு முன்னமே தொடங்கப்பட்டுவிட்டன. பின் ஏன் இந்த கட்டுரை? உலகில்

எத்தனையோ பேருக்கு புற்றுநோய் வருகிறது. ராண்டியில் அப்படி என்ன சிறப்பு? ஒன்று இருக்கிறது. ராண்டி தொடங்கிய எந்த பணியும் புற்றுநோயின் காரணமாக நிறுத்தப்படவில்லை.

ராண்டியின் வாழ்வில் புற்றுநோய் தடைக்கல்லாக அல்ல, ஒரு கிரியாஊக்கயாகவே செயல்பட்டது. மேலும் துரிதமாய் நிகழ்ந்தன பணிகள். தனக்குப்பின் யார் தனது திட்டங்களை முன்னெடுத்துச்செல்லப்போகின்றனர் என்பதை குறித்து தெளிவான முடிவுகளை எடுக்க முடிந்தது அவரால். மரணச்செய்தியை ஊக்கசக்தியாக மாற்றியது, மரணத்தினை கடைசி கணம் வரை கண்ணோடு கண் பார்த்தது இவை தான் ராண்டியின் ஆகப்பெரிய சாதனைகளாக எனக்கு தோன்றுகிறது. புனைவுகளில் மரணத்தை நோக்கி புன்முறுவலிட்டவர்களின் பட்டியல் நீளமானது. அது புனைவு என்பதனால் ஒரு கட்டத்திற்கு மேல் தாக்கம் ஏற்படுத்தாது. ஆனால் நம்மிடையே வாழும் ஒரு மனிதர் இச்செயலை புரிகையில் “அவன் மானுடன், இது சாத்தியமாகி இருக்கிறது அவனுக்கு. அதனால் நானும் ஓர் மானுடன் என்பதில் பெருமை கொள்கிறேன்” என்ற மனநிலைக்கு இட்டுச்செல்கிறது. எங்கோ அமெரிக்காவில் வாழ்ந்த ராண்டி இறந்துவிட்டார் என்ற செய்தியை கேட்டதும் கண்கள் பனித்தது நாம் ஏதோ ஓர் இழையினால் பின்னப்பட்டுள்ளோம் என்பதனால் தான்.

**ஆலிஸ் பற்றி சிறிது பேசலாம்.**

ஒவ்வொரு வருடமும் ஆண்டு விடுமுறை தொடங்கியதும் தொடங்கிவிடும் எந்த ஊருக்கு போவது என்ற விவாதம். ஊர் என்றால் அம்மா ஊரான மதுராந்தகம், அப்பா ஊரான திருவண்ணாமலை, இரண்டில் ஒன்று. இரண்டுக்குமே தாம்பரம் வழியாகத்தான் போக வேண்டும். தாம்பரத்தில் ஒரு கண் தெரியாதவர் கைக்குட்டைகள் விற்றபடி பேருந்தில் ஏறுவார். கைக்குட்டை மிக மிக சுமார் ரகம் தான். ஆனாலும் அதை கடமையாக வாங்குபவர்கள் இருவராவது இருப்பார்கள் பேருந்தில். அங்கு கைக்குட்டையின் தரத்தினை தீர்மானித்தது கைக்குட்டை அல்ல, விற்றவரின் ஊனம். ஆலிஸ் பற்றி பேசுகையில் இது நிகழ்ந்துவிடுமோ என்ற அச்சத்துடன் தான் இந்த கட்டுரையை எழுதுகிறேன்.

ஆலிஸ் என்ற இந்த நிரலின் பயன்பாட்டினை உணர ராண்டி பாஷின் புற்றுநோய் குறித்து அறிந்திருக்க வேண்டியதில்லை. தன் பலத்திலேயே நிற்கும் தகுதி ஆலிஸுக்கு உண்டு.

ஆலிஸ் என்பது சிறு வயதினருக்கு கணினி நிரலாக்கத்தின் (Programming) (குறிப்பாக பொருள் சார் நிரலாக்கத்தின் [Object Oriented Programming]) அடிப்படைகளை விளையாட்டு முறையில் கற்றுத்தரும் ஒரு நிரல். அமெரிக்காவில் சில ஆண்டுகளாக கல்லூரிகளில் கணினி துறையில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்துள்ளது. கணினி நிரல் உருவாக்கம் குறித்த ஒரு வித ஒவ்வாமை பள்ளிப்பருவத்திலேயே மாணவர்களுக்கு உருவாகிவிடுவதாலேயே இது நிகழ்வதாக ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது. ஆக பிரச்சனையின் தீர்வு பள்ளியில் கணினியினை ஆர்வமூட்டும் வகையில் கற்றுத்தருவது தான். இதை சரி செய்வதென முடிவெடுத்த ராண்டி உருவாக்கிய நிரல் தான் ஆலிஸ்.

ஆலிஸ் மூலம் நாம் நிரல்களை "எழுதலாம்", ஒரு வரி கூட எழுதாமல். ஆலிஸ் பற்றி அறிந்துகொள்ள பொருள் சார் நிரலாக்கம் குறித்து புரிந்துகொள்ள வேண்டும். பொருள் சார் நிரலாக்கம் (Object Oriented Programming) என்ற நிரல் உருவாக்க கோட்பாட்டின் படி அனைத்துமே பொருட்கள் தாம். ஒவ்வொரு பொருளுக்கும் சில தன்மைகள் (Properties) மற்றும் செயல்பாடுகள் (Behaviour) உண்டு. பொருட்கள் தத்தமக்குள் நிகழ்த்தும் உறவாடல்களே ஒரு நிரலின் நிகழ்வுகளாய் விரிகின்றன.

உதாரணத்திற்கு, வங்கி செயல்பாட்டிற்கான நிரல் உருவாக்க, அந்த "சிக்கல் களத்தில்" (Problem Space) என்ன பொருட்கள் இருக்கிறதென பார்க்க வேண்டும். வங்கி கணக்கு என்பது ஒரு பொருள். வங்கி கணக்கிற்கு வைப்புத்தொகை (Balance) என்பது ஒரு தன்மை. பணம் கணக்கிற்கு உள்ளே வருவதும் (Deposit), வெளியேறுவதும் (Withdrawal) செயல்பாடுகள். ஒரு பரிவர்த்தனை (transaction) நிகழ ஒரு கணக்கிலிருந்து மற்றோர் கணக்கிற்கு பணம் செல்ல வேண்டும். அதாவது இரு "வங்கி கணக்கு" பொருட்கள் தமக்குள் உறவாட வேண்டும். இதை நான் இப்போது விளக்கியது போலவே 6-வது படிக்கும் குழந்தைக்கு சொல்லிக்கொடுத்தால் என்ன ஆகும்?

இங்கு தான் ஆலிஸ் முக்கிய இடம் வகுக்கிறது. பொருள் சார் நிரலாக்கத்தில் அடிப்படைகளை கற்றுத்தர ஆலிஸ் பயன்படுத்தும் உத்தி இது தான். ஆலிசை திறந்தவுடன் நம்முன் ஒரு "உலகம்" இருக்கும். இப்போதைக்கு அந்த உலகத்தில் எதுவும் இல்லை.

வெறும் பாழ் [படம் 1]. இவ்வுலகில் நாம் வீடு, மனிதன், பூச்சி என பல்வேறு விதமான பொருட்களை சேர்க்கலாம். ஒவ்வொரு பொருளின் தன்மையை மாற்றலாம். செயல்பாடுகளை சேர்க்கலாம். உதாரணமாக சூரியன் என்ற பொருளை சேர்க்கலாம். சூரியனுக்கு "இங்கு இருந்து இவ்வளவு தூரம் நகர்ந்து அதோ மலைக்கு பின்னே போய் மறை" என்ற செயல்பாட்டினை தரலாம். அது நிகழும் போதே "உலகில்" "வெளிச்சத்தை குறைத்துக்கொள்" என்ற செயல்பாட்டினை தரலாம். விளையாட்டாக பாவித்தே இதை குழந்தைகள் செய்யலாம். ஆனால் இவற்றின் மூலம் அவர்கள் நிரலாக்கத்தின் பல அடிப்படைகளை கற்காமலேயே உள்வாங்கிக்கொள்கிறார்கள். ஒவ்வொரு நிரலின் முடிவும் ஒரு யஅைஅயவழைெஆக காட்சியளிக்கும் [படம் 2]. இவற்றை யஎை கோப்புகளாகவும் சேமிக்க முடியும். ஆலிஸ் குழு இப்போது அடுத்த பதிப்பான 3.0-வை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளனர். 2.0 குறிப்பாக எந்த ஒரு கணினி மொழியையும் கற்றுத்தருவதில்லை. நிரலாக்கத்தின் பொது விதிகளை மட்டுமே கற்றுத்தருகிறது. ஆனால் ஆலிஸ் 3.0 மூலம் நாம் ஜாவா மொழியை கற்றுக்கொள்ள முடியும்.




படம் 1 - "பாழ்" உலகம்.




படம் 2 : நான் “எழுதிய” நிரல் - காட்சிக்கோப்பாக

பத்து சதவிகித அமெரிக்க பள்ளிகள் ஆலிஸ் மூலம் கணினி நிரலாக்கத்தினை கற்றுத்தருவதாக ஒரு புள்ளி விவரம் சொல்கிறார்கள். இந்தியாவிலும் இந்த நிரலினை பயன்படுத்தி கற்றுக்கொடுத்தால் நிச்சயம் பலன் தரும் என்றே தோன்றுகிறது.

ராண்டி பாஷ் 2007 செப்டம்பர் மாதம் கார்னகி மெலன் பல்கலைக்கழகத்தில் “கடைசி உரை” (Last Lecture) என்ற தலைப்பில் ஒரு உரை நிகழ்த்தினார். இது இணையத்தில் மிகப்பரவலாக பார்க்கப்பட்டது. அந்த உரையில் ஒரு இடத்தில் இப்படி சொல்கிறார். “மோசஸின் வாக்களிக்கப்பட்ட பூமி (Promised Land) போல தான் எனக்கு ஆலிஸ் 3.0. அங்கு தேனும் பாலும் ஓடுகிறது என எனக்கு தெரியும். உங்களுக்கு வழியையும் காட்டுவேன். ஆனால் நீங்கள் அங்கு சென்று சேரும் போது நான் இருக்க மாட்டேன்”. அடுத்த வருட கோடையில் தான் ஆலிஸ் 3.0 வெளிவரவிருக்கிறது. ராண்டி கைகாட்டிய திசையில் பயணித்துக்கொண்டிருக்கின்றது அவர் உருவாக்கிய குழு. சிறு வயதில் தினமணி கதிரில் பார்த்த ஒரு புகைப்படம். பசுமை சூழ்ந்த குளம். அதில் ஒரு பெண் குளித்துக்கொண்டிருக்கிறாள். தன் நீண்ட மயிற்கற்றைகளை காற்றில் எம்ப விட,

அவற்றிலிருந்து மேலெழும் நீர்த்திவலைகள் அந்தரத்தில் உறைந்து நிற்கின்றன. கண்ணைப்பறிக்கும் அழகு மிளிரும் படம் அது. அதன் கீழ் இந்த வாசகம். “கண நேர வாழ்வெனினும் காட்சியாய் வாழ்”. ராண்டி பாஷின் வாழ்க்கையை நோக்கினால் இது தான் பிரதானமாய் தெரிகிறது. கண நேர வாழ்வெனினும் காட்சியாய் வாழ்தல்.

**சுட்டிகள்:**

ராண்டி பற்றிய விக்கி பக்கம்:

http://en.wikipedia.org/wiki/Randy_Pausch

ராண்டியின் “கடைசி உரை”:

http://en.wikipedia.org/wiki/Really_Achieving_Your_Childhood_Dreams

கடைசி உரை கூகுள் வீடியோவில் படமாக:

http://video.google.com/videoplay?docid];uP-5700431505846055184

ஆலிஸ் தளம்: http://www.alice.org

சித்தார்த்
neotamizhan@gmail.com

## அப்துல் ஜப்பார் அய்யாவுடன் ஒரு சந்திப்பு

**1) இன்றைய சூழ்நிலையில் தமிழ் வர்ணனைக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு இருக்கின்றதா?**

நிச்சயமாக தமிழ் வர்ணனைக்கு என்றுமே எதிர்காலம் உண்டு. இல்லாமலா Neo Sports-ம் ESPN-ம் அத்தனை பொருட்செலவில் தமிழ் வர்ணனையை ஏற்பாடு செய்தார்கள். ஆனால் நம்ம ஊர் ஆளுழு க்கஞம் Cable Operator களும் வள்ளிசாக ஒத்துழைக்கவில்லை என்பதுதான் சோகத்திலும் சோகம்.

அது மட்டுமல்ல மோஹன் ராமன் செய்யும் தமிங்கில வர்ணனை என்னும் கேவலத்தை உடனே நிறுத்தா விட்டால், வரவேற்பு என்பது ஒரு புறம் இருக்கட்டும் தமிழ் வர்ணனை என்பது செத்தே போகும் அல்லது தற்கொலை செய்து கொண்டுவிடும்.

**2) கிரிக்கெட் தவிர மற்ற விளையாட்டுகளிலும் மக்களுக்கு ஆர்வம் பெருக வேண்டும். அதற்கு அரசு என்ன செய்ய வேண்டும். தங்களை போன்ற பெரியவர்கள் என்ன செய்யலாம்?**

வெற்றிக்கு அநேக தந்தைகள். தோல்வி என்பது அநாதை. கிரிக்கட் உலகக் கோப்பையை வென்ற பிறகுதான் இவ்வளவு “மவுசு” விஸ்வநாதன் ஆனந்த் வெற்றிகளுக்குப் பிறகுதான் சதுரங்கள் இவ்வளவு பிரபலமானது.

ராமநாதன் கிருஷ்ணன், ரமேஷ் கிருஷ்ணன், அமிர்தராஜ் சகோதரர்கள். இப்போது பயஸ் - பூபதி, சானியா மிர்ஸா என்பவர்களால்தான் டென்னிஸ் பயிற்சி மையங்களில் கூட்டம் அலை மோதுகிறது.

உதைப்பந்தாட்டத்தில் ஆசிய நாடுகளான, ஜப்பான், தென் கொரியா, சவூதி அரேபியா உலகக் கோப்பைக்கு அருகதை பெறுகின்றன. நாமோ உலக அளவில் 144 வது இடம். ஏனைய விளையாட்டுக்களிலும் அத்தி பூத்தாற் போல் அங்கொன்றும் இங்கொன்றும் என்று மிளிர்ந்தால் பயனில்லை. ஒட்டு மொத்த - ஒருமித்த வளர்ச்சி தேவை.

சாதனை படைக்காத வரை எந்த Sponsor-ம் உங்களை பத்தடி கம்பு கொண்டு கூடத் தொட மாட்டார்கள். கிரிக்கட்டை கட்டிக் கொண்டு அழுகிறார்கள் என்று புலம்பிப் பயனில்லை. கிராமங்களில் விளையாட்டு கட்டமைப்புகள் மேம்படுத்தப் பட வேண்டும். ஒரு கள விளையாட்டு, ஒரு உள்ளரங்கு விளையாட்டென்று மாணவ மாணவிகள் ஏதாவது இரண்டில் பயிற்சியும் தேர்ச்சியும் பெறுவது கட்டாயமாக்கப்பட வேண்டும்.

விளையாட்டுக்காக அரசு வேலை வழங்கப்பட்டவர்கள் குறைந்தது அந்த ஆட்டத்தில் தொடர்ந்து சாதனைகளுக்கு முயல வேண்டும். அல்லாதவர்கள் நீக்கப்பட வேண்டும். இப்போது வேலை கிடைத்த மூன்று மாதத்தில் எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு "தொந்தியும் தொப்பையும்" ஆகிப்போகிறார்கள்.

இளமையிலேயே திறமை இனம் காணப்பட்டு படிப்போடு விளையாட்டையும் தொடர அரசு முழு உதவி அளிக்க வேண்டும். இந்தத் தலைமுறையிடம் சங்கதி இவ்வளவுதான் என்று கை கழுவி விடலாம் இனி வரும் தலைமுறையை இப்போதே சரியான திக்கில் செலுத்தி வளர்த்தெடுக்கலாம். இன்னும் இருபது ஆண்டுகளில் இந்தியா முன்னணியில் நிற்கும். உதாரணம் சீனா.

திட்டமிடல், ஒருங்கிணைத்தல், நடைமுறைப் படுத்துதல் ஆகியவற்றில் என்னைப்போன்ற அனுபவசாலிகளின் திறமையைப் பயன்படுத்தலாம். அது நடக்காது. ஏனெனில் அரசியல் செல்வாக்கில்லாமல் விளையாட்டுத்துறை அமைச்சரை நான் அண்டவே முடியாதே

**3) இன்றைய தலைமுறையில் நாற்பதற்கும் குறைந்த சதவிகிதம் பேர் சரியான தமிழில் பேசுகின்றனர், எழுதுகின்றனர்.அடுத்த தலைமுறையினருக்கு தமிழ் என்பது தாய்மொழி அவ்வளவே. அவர்களுக்கு தமிழ் எழுதவோ படிக்கவோ ஆர்வம் வரவழைக்க என்ன செய்ய முடியும்?**

"கையில் காசில்லாதவன் கடவுளானாலும் கதவைச் சாத்தடி" என்கிற ஆதாய நோக்குக்கு மட்டுமே ஆட்பட்டிருக்கிறது சமூகம். பொருளாதாரக் கரையான்கள் நம்முடைய தொன்மை, பாரம்பரியப் பெருமைகள், பெறுமதிகள் ஆகியவற்றை மெல்ல மெல்ல அரித்து வருகின்றன.

இதில் மொழியும் அகப்பட்டுக் கொண்டு விழி பிதுங்குகிறது. தமிழால் வேலை கிடைக்குமா ? வாழ்வு கிடைக்குமா? -- யோசி ! இல்லையா ஆதாயமில்லாத எதையும் தூக்கி எறி !! என்கிற மன நிலைக்கு மக்கள் வந்து விட்டனர் அல்லது வந்து கொண்டிருக்கின்றனர்.

புலம் பெயர்வு. பிழைக்கும் நாட்டில் புழங்கும் மொழியைப் பயில வெண்டிய கட்டாயம். உள்ளூரிலேயே மதிக்கப்படாத நிலை. என்பன போன்ற, எதிரான சூழ்நிலை என்று சொல்ல மாட்டேன். ஆனால் ஆதரவற்ற, ஒரு சுற்றுப்பாடு அச்சுறுத்தும் ஓர் அறைகூவல்தான். ஆனால் தமிழ் அதை சமாளிக்கும் வெல்லும்.

**4) நூறாண்டுக்கு மேலான ஆங்கிலேய ஆட்சியிலேயே சாகாத மொழியா இப்போது செத்து விடப் போகிறது ?**

சில யதார்த்தங்களையும் நாம் மறந்து விடக் கூடாது. அடுத்த 40 ஆண்டுகளில் அழியப் போகிற மொழிகளின் பட்டியலில் தமிழ் முதல் இடத்தில் இருப்பதாக உள்ள தகவல் கவலை தருகிறது. ஆனால் கணினி ஏற்றுக் கொண்ட மொழி ஆதலால் அது அழியாது என்கிற செய்தி உற்சாகம் தருகிறது.

நாங்கள் தான் தமிழை வளர்க்கிறோம் - வளர்ப்போம் என்று எவரும் சொன்னால் நம்பாதீர்கள். அழித்து விடுவோம் என்று அச்சுறுத்தினால் அஞ்சாதீர்கள். இரண்டு விஷயங்களிலுமே எந்தக் கொம்பனாலும் எதுவும் செய்து விட முடியாது. இன்று தமிழை நம்பி பலர் இல்லை என்பது ஒரு யதார்த்தமாக இருக்கலாம். ஆனால், தமிழும் யாரையும் நம்பி இல்லை. தமிழை அதன் போக்கில் விடுங்கள். தானாக வளரவும், தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் தமிழுக்குத் தெரியும்.

**5) இளம் எழுத்தாளர்கள் எந்த திசையில் கவனம் செலுத்த வேண்டும்? எது காலத்தின் அவசியமாக கருதுகின்றீர்கள்?**

அறிவு என்னும் ஆய்தத்தைக் கூர்மையாக்கிக் கொள்ளுங்கள். தகுதிகளை பெருக்கிக் கொள்ளுங்கள். ஆழமான நீச்சல் அவசியம். நுனிப்புல் மேய்ச்சல் கூடவே கூடாது. திசை

மற்றும் இலக்குகளை காலமும் சமூகச் சூழலும் தான் தீர்மானிக்கும். அப்படி எழும் சவால்களுக்கு ஈடு கொடுப்பவன் தான் நல்ல எழுத்தாளனாக முடியும். “அமைப்பு”களின் அங்கீகாரம் எத்தகையது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே மக்கள் அங்கீகாரம்தான் முக்கியம். ஆகவே முதலில் அதையே இலக்காக வைத்துத் தொடங்கலாம். எடுபடுவதும் எடுபடாமல் போவதும் தலையில் உள்ள சரக்கையும், உங்கள் லட்சியத்தில் உங்களுக்குள்ள பிடிபாட்டையும் பொறுத்தது.

ஏர்னஸ்ட் ஹெமிங்வே ஒரு முறை,. “நான் எழுதுவதை பரண் மேல் போட்டு விடுவேன். ஒரு ஆறு மாதம் கழித்து தூசி தட்டி எடுத்து, அதில் எனக்குப் பிடித்தமான பகுதிகளையெல்லாம் வெட்டி எடுத்து விட்டு பிரசுரத்துக்கு அனுப்புவேன்” என்று சொல்லி இருக்கிறார். இதில் உங்களுக்கு என்ன புரிகிறதோ புரிந்து கொள்ளுங்கள்.

**6) இன்றைய இளைய தலைமுறைமீது நிறைய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றது. ஆனால் நீங்கள் இவர்களை பற்றி பெருமையாக என்ன நினைக்கின்றீர்கள். இவர்கள் எங்கே மாற வேண்டும்?**

I believe in posterity எதிர்காலத் தலைமுறை மீது நம்பிக்கை உள்ளவன் நான். எடுத்ததற்கெல்லாம் இளையவர்களைக் குறை சொல்லும் வயதானவர்களின்
வழமையான “தொண தொணப்பு” என்னைத் தீண்டியதே இல்லை.

தாத்தா மொட்டை அடித்திருந்தார். மகன் “கிராப்” வெட்டிக் கொண்டபோது தாத்தா கோபித்தார். பேரன் “பங்க்” வைத்துக் கொண்டபோது தந்தை அவனைத் திட்டித் தீர்த்தார். இப்படி இளைய தலைமுறையின் எண்ணங்களையும் செயல்களையும் ஏற்றுக் கொள்ளாத மூத்த தலைமுறை காலம் காலமாக நம்மிடையே இருந்துதான் வந்திருக்கிறது. மாற்றத்தை விரும்பாத மனப் போக்குதான் அதற்குக் காரணம். ஒவ்வொரு தலைமுறையும் தாங்கள் வாழ்ந்த காலம் தான் “பொற்காலம்” இந்தக் காலமும், காலத்து இளைய தலைமுறையும் குட்டிச் சுவராகப் போய்க் கொண்டிருப்பதாகத்தான் புலம்புகிறார்கள். இந்தப் புலம்பலை இனி வரும் தலைமுறையும் செய்யும். அதுதான் இதிலுள்ள வேடிக்கை.

வல்லவனுக்கு வல்லவன் வாழ்வான் அல்லது ஏரசளளையட ழகச வாந கவைவநளவ என்கிற சூழ்நிலையில், அவனவனுக்கு அவனவனது சொந்த "நிலை-நிற்பு" முக்கியம். அதற்காக அவனுக்குகந்த வழியைத்தான் அவன் தேர்ந்தெடுப்பான். ஆவனை அவன் போக்கில் விடுங்கள். நாயின் வாலாட்டத்தை ரசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அதன் வாலை நிமிர்த்த முயலாதீர்கள்.

**7) உங்கள் தினசரி வாழ்கை பற்றி அறிந்து கொள்ளலாமா?**

வீட்டிலிருந்தாலும் வெளியே போனாலும் தினசரி குறைந்தது 16 மணி நேர உழைப்பென்பது என்னைப் பொறுத்தவரை ஒரு எழுதப்படாத விதியாகி இருக்கிறது.

காலையில் கனடா நாட்டு "தமிழோசை" வானொலிக்காகச் செய்தி. வாரம் தோறும் லண்டன் ஐ.பி.சி-தமிழ் வானொலிக்காக "இந்தியக் கணோட்டம்" தீபம் தொலைக்காட்சியில் "அரங்கம்-அந்தரங்கம்" அரசியல் பேட்டி நிகழ்ச்சி அவ்வப்போது சிங்கப்பூர் பண்பலை வானொலி, தொலைக்காட்சியில் அவ்வப்போது நடைபெறும் இந்திய, சர்வதேச சம்பவங்கள் குறித்த கருத்து தெரிவித்தல், மக்கள் தொலைக்காட்சியில் ஞாயிறு காலை எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகும் "இவர்கள்" நிகழ்ச்சிக்கு கருத்துரை, worldtamilnews.com இணைய தள வானொலிக்கு வாரம் இருமுறை "கவிதை கேளுங்கள்" நிகழ்ச்சி தயாரித்து அளித்தல், அவ்வப்போது பத்திரிகைகள் கேட்டால் கட்டுரைகள்.

றுமை தொலைக்காட்சியில் 28 மாதங்கள் செய்தி ஆசிரியராக இருந்தேன். இப்போது இல்லை. அதில் ஒரு ஆறு மணி நேரம் மீந்தது. அதனை 794 பக்கங்கள் கொண்ட ஒரு ஆங்கில நூலை மொழி பெயர்ப்பதில் செலவிடுகிறேன். சினிமா அதிகம் பார்ப்பதில்லை. சில தேர்ந்தெடுத்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பார்ப்பேன். நிறைய படிப்பேன். இப்படிச் சொல்லலாம். ஆதிகாலை எழுந்தால், இடையில் உணவு, சிறிது ஓய்வு ஆகிய தேவைகள் போக, இரவு ஒன்பது ஒன்பதரை வரை உழைப்பு, வெந்நீரில் ஓர் இளங்குளியல், மிதமான உணவு, ஆங்கிலச் செய்திகள், அத்தனை பத்திரிகைகள் சஞ்சிகைகள் மீது ஒரு பறவைப் பார்வை - கண்ணோட்டம். 10.30 - 11.00க்கு உறக்கம். Touch wood.

**8) நகைச்சுவை, தின வாழ்வில் எவ்வளவு அவசியம்?**

சிரிப்பு, வேறு ஜீவராசிகளுக்குக் கிட்டாத, ஆனால் மனித குலத்துக்கே சொந்தமான ஒரு சிறப்பு. இது இல்லாமல் கூட வாழ்ந்து விடலாம். ஆனால் அது வாழ்க்கையே அல்ல. சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழக்கூடாது. சிலர் சிரிப்பை ஊறுகாய் அதாவது வாழ்க்கைக்கு மெருகு சேர்ப்பது என்பார்கள். ஆனால் என்னைக்கேட்டால் மகிழ்ச்சியான வாழ்வின் அஸ்திவாரமே அதுதான் என்பேன். Laugh, the world will laugh with you. Cry, the world will laugh AT you. சிரியுங்கள் உலகம் உங்களோடு சேர்ந்து சிரிக்கும். அழுங்கள், உலகம் உங்களைப் பார்த்து அழாது - சிரிக்கும்.

**9) “காற்று வெளியினிலே” பற்றிய சில வரிகள்...**

என்னுடைய சுமார் அரை நூற்றாண்டுகால அனுபவங்களின் பதிவு “காற்று வெளியினிலே” நூல். ஊடகத்துறையில் என் பங்களிப்பு. என் நிஜ வாழ்வில் சில சம்பவக் கோர்வைகள் என்றமைந்துள்ளது இந்த நூல். இன்னும் விரிவாக எழுத வேண்டும் என்பது பலரது விருப்பம். பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் இந்நூல் பற்றி ஜெயா தொலைக்காட்சியில் பத்து நிமிடங்கள் பேசினார். அவரும் இதையே சொன்னார். இந்த நூலுக்குக் கிடைத்த வரவேற்பு உண்மையில் என்னை ஆச்சரியப்பட வைத்தது. என்னை நானே உற்றுப் பார்த்துக் கொண்ட ஒரு பாசாங்கில்லாத பதிவு இது.

**10) வாழ்வில் உங்களுக்கு கிடைத்த மிகப்பெரிய பரிசாக எதை கருதுகின்றீர்கள்?**

என் விருதுகளைப் பட்டியலிடுவது சுய தம்பட்டமாகத் தெரியலாம். ஒரு கிராமத்தில் ஒரு கிரிக்கட் போட்டி. பந்தல் போட்டு, தோரணம் கட்டி, ஒலிபெருக்கியெல்லாம் வைத்து கோலாகலமாய் நடை பெற்றது. அத்துடன் ஆட்டம் பற்றிய வர்ணனையும். ஒரு கட்டத்தில், “ஆஹா.. இந்த அற்புத ஆட்டத்தை வர்ணிக்க அப்துல் ஜப்பார் இல்லையே என்று ஆதங்கப் படுகிறேன்“ என்றார் வர்ணனை செய்து கொண்டிருந்தவர் அதை ரசித்தவண்ணம், என்னை யார் என்று காட்டிக் கொள்ளாமலேயே அந்த இடத்தை விட்டகன்றேன். இதைத்தான் எனக்குக் கிடைத்த மிகப் பெரிய பரிசாகக் கருதுகிறேன்.

**11) உங்கள் வெற்றியின் இரகசியத்தை எங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

என்னுடையது ஒரு வெற்றிகரமான வாழ்க்கை என்று நான் சொன்னால்தான் அதில் வெற்றியின் ரகசியம் இருக்கக்கூடும் அதை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்வது நியாயம். நான் அப்படியெல்லாம் எதுவும் நினைக்கவில்லை. என்னுடையதை சராசரி அல்லது சராசரிக்கும் சற்று மேலான வாழ்க்கை எனலாம். அவ்வளவே. வேண்டுமானால் ஒரு நிறைவான வாழ்க்கை எனலாம். எனக்கும் எவ்வளவோ மனக்குறைகள் இருந்தன. அருகதைப் பட்டது கிடைக்கவில்லை என்கிற ஆதங்கமெல்லாம் இருந்த்து.அவற்றையெல்லாம் மறக்கக் கற்றுக் கொண்டதும் இருப்பதே போது என்கிற பக்குவம் வந்தது. மனக்குறைகள் நீங்கி இறைவன் எனக்களித்திருப்பது ஒரு நிறைவான வாழ்க்கை என்று தோன்றியது. மழையில் எல்லாம் நனைந்ததில்லை. எனவே கர்வம் என்கிற ஜலதோஷமெல்லாம் பிடித்ததில்லை. ஏதோ அடித்த சாரலில் என் மீது சில புகழ்த்துளிகள் பட்டிருக்கலாம். அவ்வளவே! இதற்கு வெற்றி என்றெல்லாம் நான் முத்திரை குத்த நான் பிரியப்படவில்லை.

**12) தோல்வி உங்களை அவ்வப்பொழுது தழுவும் போது நீங்கள் உங்களுக்கு சொல்லிக்கொள்வதென்ன?**

இறைவன் வகுத்த வழி. இலக்கு என்பது நம் செயல்களை அளவிடும் கருவிதான். இவ்வளவு நிர்ணயித்தோம் இவ்வளவுதான் முடிந்திருக்கிறது அல்லது அதையும் தாண்டி இருக்கிறது. இதையொட்டி புதிய இலக்குகள் ரூபம் கொள்ளலாம். இலக்கு, இலட்சியம் என்பவையெல்லாம் உன்னதமானவை. சராசரி மனிதர்களால் அது சாத்தியமா என்பதெல்லாம் கேள்விகுரிய விஷயங்கள். Keep pushing. Take life in its own stride. அடையை நகர்த்திக் கொண்டே இருங்கள். வாழ்க்கையை அதன் போக்கிலேயே ஏற்றுக் கொள்ளுங்கள் என்பதுதான் சங்கடமில்லா வாழ்க்கைக்கு வழிவகுக்கும் என்று நம்புகிறேன்.

வாழ்க - வளர்க - அனைவருக்கும் அன்பு - நன்றி - வணக்கம்.

சாத்தான்குளம் அப்துல் ஜப்பார்

## அப்பனாத்தா நீதான்

வெயிலடிச்சு ஊரு காஞ்சு கெடக்கும் நேரம்
கையை மழை நனைச்சுப் போனதுன்கண் ஈரம்
ஊரு பாக்க மீச முறுக்கி போன எ(ன்) ஐயா
உன் வீரமெல்லாம் போயி கண்ணீர் விட்டது ஏ(ன்)ய்யா
காரு புடிச்சு பத்திரமா ஏத்திவிட்டு
கதவு ஓசபடாம பக்குவமா சாத்திப்புட்டு
துண்டெடுத்து வேர்வையோட கண்ணீரும்
தொடச்சுபுட்டு மீசைய முறுக்கினதுன் வீரம்

அம்மா அம்மான்னு பலசொல்லு காதில்விழும்
ஐயா ஐயான்னு இந்தப்புள்ள மட்டும் அழும்
கண்ணு போன பெரியாத்தா
ரெண்டாம் கல்யாணத்துக்கு சொல்லிப் பாத்தா
பொஞ்சாதி பொண்ணு ஆத்தா எல்லாமே நாந்தான்னு
பெருமையா நீ சொன்னப்ப கலங்குனது என்கண்ணு

வயித்தப் புடிச்சுகிட்டு வழியேதும் தெரியாம
சமஞ்ச சேதி உன்கிட்ட சொன்னது இந்தமக
ஊருகூட்டிப் பந்தலிட்டுக் கெடா வெட்டுன
தங்க வளையலும் தோடுமா நக பூட்டுன
சந்தி முக்குல என்ன கேலி பேசுன பையல
நீ பந்தாடுனதப் பார்த்துபொறவு வார்த்தையேதும் வரல

மெத்தப் படிக்க டவுனுக்குப் போனே(ன்)
என்னத் தேடி நீயும் மெலிஞ்சுப் போன
பொண்ணுங்ககூட பெருசா அரட்டையடிச்சேன்
பையகள கொஞ்சம் கேலிசெஞ்சு வச்சேன்
கூத்துக் கேலி கும்மாளத்தோட
காதலும் வந்து சேந்துக்கிட

வீட்ட விட்டு வருவியா என்கூடன்னு
கேட்டுப்புட்டான் கேள்விய பட்டுன்னு
வீட்டுச் சம்மதம் வாங்கியாரேன்
கெடைக்காட்டி உங்கூட ஓடிவாரேன்னு
சொல்லிப்புட்டு அழுது வடிச்சேன்
கண்ணீரோடு ஐயா பாசம் கொஞ்சம் கரைச்சேன்
படிச்சு முடிச்சு ஊரு வந்தே(ன்)
பாசம் கொஞ்சம் மறந்து வந்தே(ன்)

எப்படித்தான் புரிஞ்சுதோ பாவிமக நெனப்பு
கல்யாணத்துக்குத் தேதி குறிச்ச எனக்கு
பொண்ணு பார்க்க வருவாகன்ன
சீக்கிரமே கல்யாணம்ன்ன
மொத மொதலா என் மனசு முழுசா
அம்மாவத் தேடி அழுதுச்சுப் புதுசா
சீவி முடிச்சு சேல உடுத்தி சிங்காரமா
வந்து நின்னேன் ஒரு பொணமா

காப்பி கொடுக்க குனிஞ்சு நின்னேன்
மாப்பிள்ள கைபடவும் துடிச்சுப் போனேன்
பதட்டத்துல மாப்பிள்ள மொகம் பார்த்தேன்
பாவிப்பய நான் காதலிச்ச பையதேன்
ஓடிவந்து உன்னைக் கட்டிப்புடிச்சு நானழ
ஆத்தா நீ அழாதடான்னு சொல்லி நீயழ
ஆத்தா நியாபகம் அழிஞ்சுடுச்சு எம்மனசுல
அப்பனாத்தா நீதான்னு கண்ணீர்விட்டேன் நிக்கல

ஒளியவன்
mailme.baskar@gmail.com

## நனைதலின் தேடல் - கட்டுரை

அறியாமலே விட்டுச்செல்கிறது

ஒவ்வொரு நனைதலும்

பிறிதொரு மழைக்கான தேடலை...

**நன்றி:** லக்ஷ்மி சகம்பரி

எப்போதும் மழை என்பது ரம்யம், சுகந்தம், சந்தோசம் தான். மழை எத்தனை சுகமென்றாலும், நனைத்தல் என்னவோ எல்லா மழையிலும் கிடைக்க கூடியதன்று. எப்போதும் எதாவது ஒரு காரணமிருக்கும் மழையில் நனைதலை தவிர்ப்பதற்கு. கையில் முக்கியமான அலுவல் சம்மந்தப்பட்ட தாள்களோ இல்லை அதிகப்படியான பண நோட்டுகளோ இருக்கலாம். நாம் நனைய நினைத்த இடத்தில் நிறைய மக்கள் கூடி இருக்கலாம். நமக்கு நம் ஆடை பற்றிய கவலை இருக்கலாம். வீட்டிலே இருக்கும் பட்சத்தில் கூட காய்ச்சல் பயமிருக்கலாம்.

காரணம் எதுவாயினும் மழையில் நனைதல் மண்ணுலகில் கிடைக்க கூடிய ஒரு மிக சிறந்த சந்தோசமான இழக்க கூடாத தருணம். அத்தருணத்தின் இழப்பை சொல்ல வார்த்தைகள் கிடையாது. நனைந்து பழகியவர்க்கு, நனைய பிடித்தவர்க்கு மட்டுமே புரிந்த ஒன்று இம்மழை நனைதல். அது வார்த்தையில் அடக்கவியலாத அனுபவம். அப்படிப்பட்ட மழை நனைதல் மீண்டும் மழை தேடலை தூண்டி செல்வது ஒரு ஆச்சரியமற்ற விசயமன்றோ. இங்கே நனைதல் என்ற உணர்விற்கு ஒத்த ஒரு சில உணர்வுகளை பார்க்கலாம்.

**வன்மம்:**

வேம்புண்ட வாய்க்கு எதை தின்றாலும் கசக்கும். அதைப் போல என் நண்பர் ஒருவர் அலுவலக அரசியலில் பெயர் போனவர். நல்ல பேச்சுதிறன் கொண்டவர். அலுவலக நிர்வாகிகளிடம் பெரும் செல்வாக்குள்ளவர். அவருக்கு ஒருவரை பிடிக்கவில்லை என்றால் எப்படியாவது சில சிக்கல்களை உருவாக்கி அந்நபரை பழி வாங்கி விடுவார். அவர் என் தோழியின் மேல் ஏதோ காரணத்தால் வன்மம் கொண்டு விட்டார். பின் அவள் செய்யும் சின்னஞ்சிறு தவறுகளை கூட பெரிது படுத்தி அனைவரின் முன்னிலும் அவளுக்கு அவபெயரை ஏற்படுத்திக் கொண்டு இருந்தார்.

ஒரு முறை அவள் தன் பணிக்காக ஒருவர் உதவியை நாடியதை மிகைப்படுத்தி அந்நபரை அடிமைப்படுத்தி கொடுமை செய்கின்றார் என்பது போல பெயர் ஏற்படுத்தி விட்டார். இதைவிட கொடுமை அப்பெண்ணின் நடவடிக்கை, மற்றவரிடம் பழகும் தன்மை சரியில்லை என்று மேலிடத்தில் சொல்லி அவளுக்கு கிடைக்க வேண்டிய சம்பள உயர்வையும், பதவி உயர்வையும் இல்லாமல் செய்து விட்டார். இதனால் அப்பெண் அந்த அலுவலகத்தேயே விட்டுச்செல்ல வேண்டிய நிலை வந்து விட்டது.

அப்போது புரிந்தது. எப்போதும் வன்மம் தன்னை அறியாமலே மேலும் வன்மத்தை வளர்க்கின்றதென்று. இதே போல எதிர்பார்ப்பு இன்னும் எதிர்பார்ப்புகளை தூண்டும். ஏமாற்றம் மேலும் சில ஏமாற்றங்களுக்கு வித்திடும். சந்தேகம் சந்தேகங்களை வளர்க்கும்.

**காதல்:**

ஒவ்வொரு நனைதலையும் ஒரு காதல் உணர்வோடு ஒப்பிடலாம். மழையை காதல் புணர்தலின் குறியீடாக பார்ப்பது பல கவிஞர்களின் வழக்கம். ஆனால் இங்கே ஒரு வித்தியாசமான காதல் உணர்வை பற்றி கூற எண்ணுகிறேன். என் சிறு வயதிலிருந்தே ஆண்டாள் மேல் ஒரு தனி பிரியம். அவளால் கவர்ந்து இழுக்கப்பட்ட நான் அரங்கனை தான் மணக்க வேண்டும் என்று நினைத்ததுண்டு. அதை வெளியே சொல்லி அவமானப்பட்டதும் உண்டு. ஆனால் ஆண்டாள் போல் தூயவளோ திடமானவளோ அன்றே. நான் அற்ப பிறவி தானே.

சில காலம் கழிந்து ஒருவரை பார்த்த பின் இவர் கிடைத்தால் அரங்கன் தேவை இல்லை என்று எண்ணினேன். அவர் முகம் தவிர வேறு எந்த விவரமும் இன்றுவரை தெரியாதெனக்கு. அதன் பின் வீட்டில் பார்த்து மணமுடித்தனர். இப்படியாக அரங்கன் மேலான காதலை மற்றுமோர் காதல் மாற்றியது. அந்த காதலையும் கல்யாணம் மாற்றியது.

என் நண்பர் ஒருவர் ஒரு முறை தன் நண்பரை சந்தித்த போது, “அவளும் ஏமாத்திட்டு போயிட்டாடா, இன்னொரு பெண்ணை தான் தேட வேண்டும்” என்று புலம்பியதாக என்னிடம் சொன்னார்.

நீந்த தெரியாமல்

கிணற்றை

ரசிப்பது தவறென்று

ஒவ்வொரு முறை கால் தவறி

உள்விழும் பொழுதும்

நினைத்துக் கொள்கிறேன்

**நன்றி:** லக்ஷ்மண ராஜா

நிறைவேறா காதல் எல்லாமே இன்னொரு காதலுக்கான தேடலை அறியாமலே தந்து விட்டுத் தான் நீங்குகிறது.

**ஆசை:**

தொட்டணைத்தூறும் மணற்கேணியைப் போல ஆசைக்கு அளவில்லை. ஆசையே துன்பத்திற்கு காரணம். ஆயினும் ஆசை யாரை விட்டது. உதாரணத்திற்கு என் எழுத்தார்வம். அதிகம் வாசிப்பதில்லை. ஏதோ எனக்கு புரிந்த ஒரு சில கவிதைகளை யான் பெற்ற இன்பம் பெறுக இந்த வையகம் என்றெண்ணி கவிதையின் பல கோணங்களை வடிக்க போக அதை ஒரு சிலர் வேறு வழியில்லாமல் நன்றாக இருப்பதாக சொல்லப் போக, அந்த போதை எனக்கு பிடித்துப் போக மீண்டும் ஓர் கவிதையை விவரிக்கும் கட்டுரை.

இங்கே இப்படியாக ஆசை தன்னை அறியாமலே மேலும் ஆசையை வளர்த்து விட்டுவிடுகிறது. அதனால் பல நன்மைகளும் இருக்க தான் செய்கின்றது மழை நனைதலின் குதூகலம் போல, சுகந்தம் போல, சந்தோசம் போல.

லாவண்யா
lavanya.sundararajan@gmail.com

## காந்தி புன்னகைக்கிறார் - சிறுகதை

சென்னை தாம்பரம் ரயில் நிலையம் ஜமுனா ஜூஸ் லாண்ட். மாலை வேளை கூட்டம் அதிசயமாக குறைச்சலாக இருந்தது. மோகன், பாபு இருவரும் குளிர்பானம் அருந்தி கொண்டு இருந்தனர்.

"அண்ணே ! எவ்வளவு ஆச்சு !" - மோகன். "இரண்டு மாதுளம் – 20 ரூபாய் தம்பி"

"இருபது ரூபாவா, என்ன அண்ணே, மாசம் ஒருக்கா இப்படி வெல ஏத்தறீங்க". "த்தோடா ! ஊர்ல விலைவாசி ஏறுது, நாங்களும் ஏத்தறோம்பா. எங்க பொழப்பும் போகணும் இல்லை ! "

பர்சை துளாவியதில் பதினைந்து ரூபாய் இருந்தது. சில்லரையாக மற்றும் ஒரு ஐநூறு ரூபாய் இருந்தது. "பாபு ஒரு அஞ்சு ரூபாய் இருக்கா? இல்லைனா, இந்த ஐநூறு ரூபாய் நோட்டை உடைக்கணும்டா". "இல்லடா, பாங்க்ல எடுத்தாத்தான் உண்டு..." "சரி, இரு நான் போய் சில்லரை வாங்கிட்டு வரேன்"

கால்மணி நேரமாக சில்லரை கிடைக்கவில்லை, கடைசியாக ஒரு கடையில் கிடைத்தது. ஜமுனா ஜூஸ் லாண்ட், கடைக்காரரிடம் காசைக் கொடுத்துவிட்டு வண்டியில் கிளம்பினர். Yamaha R135. மோகன் வண்டி. மோனன் கொஞ்சம் களைப்பாய் இருந்ததால் பாபு ஓட்டிக்கொண்டு வந்தான். தங்கி இருந்த வீட்டின் அருகாமையில் வண்டி சென்றுகொண்டிருந்தது. "பாபு வண்டியை நிறுத்துடா, சலவைக்கு போட்ட துணிகளை வாங்கிட்டு போயிடலாம். அந்த ரசீதை நீதான வச்சிருக்க, எங்க அது?"

"பின்னாடி பர்சுல இருக்குபார் மோகன். அப்படியே எடு". சிறிது நேரத்தில் வீட்டை அடைந்தனர். வீட்டை திறந்து உள்ளே போகும் போதே "பாபு , நீ இப்படி பண்ணுவேன்னு நினைத்துகூட பார்க்கவில்லை. கடையில ஐஞ்சு ரூபா கேட்டதற்கு இல்லைன்னு சொல்லிட்ட. கால்மணி நேரம் தண்டமா போச்சி, அதைவிட அலைச்சல். ரசீதை எடுக்கும் போது தான் உன் பர்சுல கசிங்கின அஞ்சு ரூபாய் இருந்ததை பார்த்தேன். ஏன் கேட்ட போது கொடுக்க வேண்டியது தானே? உன்னை எவ்வளவு பெருமையா நினைத்திருந்தேன். கிராமத்தில் இருந்து

ஒரு இளைஞன் கஷ்ட்டப்பட்டு வந்து, இப்ப ஏதோ சமாளிக்கும் அளவிற்கு சம்பளம் வாங்கற. நல்ல நண்பனா தான உன்னை நடத்தினேன். அப்புறம் எதுக்கு இப்படி செய்தாய்? ஏன் டா? பதில் சொல்லு? ஏன் யாரச்சும் இளிச்சிகிட்டு வந்து கொடுத்தாளா? ” அதிகம் பேசிவிட்டான் மோகன். தவிர்த்திருக்கலாம் இந்த வார்த்தைகளை.

பாபு அமைதியாக மனமுடைந்து தன் அறைக்கு சென்றான். கையில் கிடைத்த புத்தகத்தை புரட்டினான். மனம் அதில் லயிக்கவில்லை. நினைவுகள் ஙுமாதங்களுக்கு பின்நோக்கி நகர்கின்றது. வேலை கிடைத்து முதல்முறையாக வீட்டிற்கு மூன்று மாதம் கழித்து செல்கிறான். அப்பா பஸ் நிலையத்தில் காத்திருந்தார்.”யாருப்பா குமரப்பட்டி இறங்கு, இறங்கு.” பேருந்து நின்றது. ”பாபு ! நல்ல இருக்கியா?” பையை வாங்கியபடி குரல் நடுக்கத்திலேயே அப்பாவிற்கு வேகமாக வயோதிகம் வருவதை உணர்ந்தான்.

”நல்லா இருக்கேன். வீட்டில எல்லாம் எப்படி இருக்காங்க? எங்க மதனும் லதாவும் காணல? ஸ்கூல்ல இருந்து வரலையா?” அப்பாவும் மகனும் நடையை கட்டினர் வீட்டை நோக்கி. தெருவெங்கும் விசாரிப்புகள். ”பாபு பட்டணம் எப்படி இருக்கு?”. ”பாபு தலைவர் விஜய நேரில் பார்த்தாயா?. ” கோமதி புள்ளா? மூனு மாசமாச்சு இல்ல ஊரவிட்டு போய்? ” மா பாட்டி”

வீடு வந்தது. அம்மா திண்ணையில் காத்திருந்தாள். கொஞ்சம் இளைத்து தான் போயிருந்தாள். நினைவு தெரிந்த நாள் முதலாய் ஓடாய் உழைப்பவள். ”பாபு என்னபா இளைத்துவிட்ட? வேளா வேளாஈக்கு நீ ஒழுங்கா சாப்பிடுகிறாயா? வா மொதல்ல சாப்பிடு. அப்புறமா மற்றவை பேசுவோம். வேலை எப்படி ராசா இருக்கு? ஒன்னும் பளு ஜாஸ்தி இல்லையே? ” விடாமல் பாச மழை. எல்லாவற்றிற்கும் லேசான புன்னகை. ”அடுத்த முறை வரும்போது மோகன் தம்பியையும் கூட்டிட்டு வா. தலைக்கு எண்ணெய் வெக்கிறது இல்லையா? இப்படியா வெச்சிப்ப? நாளைக்கு சீக்காய் போட்டு கசக்கறேன்”.

”உங்க அம்மாக்கு தல கால் புரியாது பாபு. மகன் வந்த சந்தோஷத்தில. முதல்ல கை கால் கழுவிட்டு வா. சாப்பிடு. அப்புறம் அம்மாவும் பையனும் கொஞ்சிப்பீங்க.” சாப்பிட்டு சிறிது நேரம் கண்ணயர்ந்தான். வறுமை கோரத்தாண்டவம் ஆடவில்லை என்றாலும் கும்மாங்குத்து

ஆடுகிறது. அப்பா மளிகை கடையில் கணக்கராக பணி புரிகிறார். சொல்லும் படியான வருமானம் இல்லை. பாபு தலை தூக்கினால் அவரின் பாரம் குறையும். மதன் 12-ம் வகுப்பு படிக்கிறான். லதா பத்தாவது. இந்த காலத்தில் மூன்று பிள்ளைகளை படிக்கவைப்பது சுலபமா என்ன? பாபுவின் சம்பளம் அவன் மாத செலவிற்கும், படிப்பிற்காக வாங்கிய லோனுக்குமே சரியாக இருக்கிறது. பல்லை கடித்து மாதம் ஆயிரம் ரூபாய் வீட்டிற்கு அனுப்புகிறான்.

”அண்ணா ! எப்ப வந்த? நல்லா இருக்கியா?” லதா. மூன்று மாதத்தில் இவள் வளர்ந்திருந்தள். லதா லதா கண்ணு... ஒழுங்கா படிக்கிறியாமா? எங்க மதன்? ”அவன் சைக்கிள் பஞ்சர் கிடுச்சு. கடைல இருக்கான். என்ன வாங்கிட்டு வந்திருக்க? வாண்ணா நம்ம கடை வரைக்கும் போய் வரலாம். ஒரு நல்ல Geometry Box வாங்கி தாண்ணே. பழசு துருபிடிச்சு போச்சு”

கடைக்கு போகும் வழியில் மதன் எதிர்பட்டான். “என்னடா தள்ளிட்டே வர?”. “நிறைய பஞ்சர் போட்டாச்சாம், அதனால புது ட்யூப் தான் போடணுமாம்.40 ரூபாய் ஆகுமாம். ஒரு வாரம் கழிச்சி போட்டுக்கிறேன். எப்பண்ணே வந்த?. ”இந்தா 50 ரூபா. போய் முதல்ல ட்யூப் மாத்து.” சைக்கிள் இல்லாம பள்ளிக்கூடம் போறது எவ்வளவு கஷ்டமென பாபுவிற்கு தெரியும்.

இரவு உணவிற்கு பின்னர், பாபு மாடிக்கு சென்று வானத்தை வெறித்துக் கொண்டிருந்தான். மதன் தயங்கி தயங்கி பாபு அருகே வந்தான். ”அண்ணா ! அடுத்த முறை வரும் போது உன் பழைய பேண்ட் இரண்டு கொண்டுவா. என் பேண்ட் எல்லாம் சின்னதாகிவிட்டது. டிரவுசர் போட்டா பசங்க கேலி பேசறாங்க. அப்பா அம்மா கிட்ட சொல்லாத. கஷ்டபடுவாங்க. சரியா? ” ”ம்ம் ”. இருட்டின் போர்வையில் பாபுவின் கண்ணீர் மறைக்கப்பட்டது. இரண்டு நாள் போனதே தெரியவில்லை. அம்மாவின் கையால் சாப்பாடு, அப்பாவின் அறிவுரைகள், அனுபவங்கள், தம்பி தங்கையின் சேட்டைகள், குறும்பு, கோரிக்கைகள், பால்ய சினேகிதர்களின் பேச்சு, அரும்பு வயதில் நோட்டம் விட்ட மங்குவின் கல்யாண சோகங்கள். கிளம்பும் போது மீண்டும் லதா நினைவு படுத்தினாள், தனக்கு தாவணி வேண்டுமென, யாருக்கும் தெரியாமல். அப்பா ”பத்திரமா இரு தம்பி. காலம் கெட்டு கெடக்கு. மதனுக்கு நல்ல காலேஜ் ஏதச்சும் விசாரி. காசுக்கு தான் என்ன பண்றதுன்னு தெரியல. சரி சரி

சீக்கிரம் வா, 5.30 மணி பஸ்சை விட்டா ராவுக்கு தான் பஸ் இருக்கு. பைகளை சைக்கிளில் வைத்து தள்ளிக்கொண்டு நடந்தார்.

”அம்மா வரேன்மா ! உடம்பை பார்த்துக்கொள்”. ”எனக்கு என்னபா இருக்கு, நீ பத்திரமா இரு. ரோட்ல போறச்ச பாத்து போ” கையில் ஏதோ நொந்தினாள். பேருந்தில் போகும் போது தான் திறந்தான். கசங்கிய ஐந்து ரூபாய். று மாதம் பின்னரும் இன்னும் செலவழிக்காமல் வைத்து இருந்தான்.

டொக்..டொக்… நினைவிகளில் இருந்து நிஜத்திற்கு இழுக்கப்பட்டான். வெளியே மோகன். ”சாரிடா பாபு. ஏதோ கோபத்தில் என்னென்னமோ பேசிட்டேன். I am very sorry டா. நீ இதை பத்தி என்கிட்ட முன்னரே சொல்லி இருக்க மறந்துவிட்டேன். கோபம் கண்ணை மறைத்துவிட்டது”. ”மோகன் இது ஒரு சாதாரண காகிதம் தான். இதுக்கு இவ்வளவு மதிப்பு தர வேண்டிய அவசியம் இல்ல. னா இந்த கசங்கின நோட்டை பார்க்கும் போதெல்லாம் எனக்கு தெரிவதெல்லாம். அம்மாவோட கலங்கமற்ற அன்பு தான்.

எதையும் எதிர்பார்க்காத பாசம் தான், என்னதான் பையன் சொந்த கால்ல நின்னாலும் அவ தருகிற பாசத்திற்கு எல்லைகள் இல்லைன்னு சொல்லுகிற காகிதம்.இதை பார்க்கின்ற போது என் குடும்பம், வீடு, தம்பி, தங்கை, அப்பாவின் கஷ்டம் எல்லாம் கண்ணு முன்னாடி வரும்.தேவையில்லாமல் செலவு செய்ய நேரும்போது இந்த காசை பர்சில் பார்த்தவுடன் ச்சே… .. நம்மள நம்பி அங்க நாலு ஜீவன் நிற்கிறது நமக்கு இந்த செலவு தேவை தானா என்று யோசிக்க வைக்கிறது. இப்போதைக்கு என் குடும்பத்தை காப்பாத்தணும், அப்புறம் என்னால முடிச்ச மட்டும் சுத்தி இருக்கிறவங்களுக்கு உதவனும். இதுக்கு எல்லாம் ஒரு ஊந்துகோல இந்த ஐந்து ரூபாய் தான்.

பர்சில் இருந்து மேசை மீது வந்த ஐந்து ரூபாயில் ”காந்தி புன்னகைக்கிறார்” அந்த உழவன் விறுவிறுவென வேகமாக உழுகிறான். ஐந்து ரூபாய் பெருமை கொள்கிறது…

விழியன்
vizhiyan@gmail.com

## பேருந்து நிலைய பகலொன்றில்...

1) புழுதி படர்ந்த மேல்சட்டையும்
பச்சைக்கிளிகள் நிறைந்த
பாவாடையும் அணிந்த அந்தச்சிறுமி
பிச்சைக்கேட்டு நீட்டிய
நசுங்கிய தட்டில் விழுகின்ற
சில்லறைகளின் ஒலியில்
தன் அழுகையை நிறுத்துகிறது
அவளிடுப்புக் குழந்தை.

2) முகம் வியர்த்து
முழம் விற்றுக்கொண்டிருந்தவளின்
வெண்நிற கூந்தலில் குடிபுகுந்திருந்தது
மஞ்சள் வெயில்.

3) பேருந்துச் சக்கரத்தில்
சிதைந்துபோனது
தெரு நாயொன்று.
தாய்ப்பாலுக்கான காத்திருத்தலில்
மடிந்திருக்கலாம் அதன்
குட்டிகள்.

நிலாரசிகன்
nilaraseegan@gmail.com

## வல்லுனர் குறிப்புகள்

கனமான புத்தகமொன்றில்
ஒற்றை வரி தேடுகையில்
Control + கு காணாமல்
எரிச்சலுற்று போனது

பேனாபிடித்து மடலெழுதி
வருடங்கள் பலவாச்சு..
பிடித்தேன்..
அம்மாவிற்கு நலமென எழுதி
மடித்து பசையொட்டி
வீட்டு விலாசமெழுதிவிட்டு
தடுமாறினேன்
தங்கைக்கு எப்படி CCயிடுவது?

அண்ணனுக்கு திருமணம்,
போய் வர புதிய வாகனம்
வெளி நாட்டு பயணம்
ஊரில் குடியிருக்க வீடு
உழைப்பால் உயர்வு
உலகிற்கு ஓர் உயிரின் அறிமுகம்
நினைத்த பெண்ணோடு நிச்சயம்
அது இதுவென எது நடப்பினும்
வாழ்த்துகளுக்கு முன்னர் வந்துவிடுகின்றது
"எங்க ட்ரீட்?"

விழியன்
vizhiyan@gmail.com

## புகைப்பட கவிதை போட்டி - 1

போட்டி மிக எளிது. இங்கே உள்ள புகைப்படத்திற்கு தகுந்தவாறு நல்ல கவிதை ஒன்றினை பத்து வரிகளுக்குள் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் அடுத்த இதழில் பதிக்கப்படும். மேலும் பரிசுகள் காத்துக்கொண்டு இருக்கின்றது. உங்களிடம் அசாதாரண புகைப்படம் இருந்தால் அந்த படத்தையும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.



படைப்புகளை அனுப்பவேண்டிய மின்னஞ்சல் முகவரி: mentamil@gmail.com

## கிழவனும் கடலும் - நூல் விமர்சனம்

வெகு நாட்களாய் படிக்க நினைத்திருந்த ”கிழவனும் கடலும்” நூல் படிப்பதற்கு நேற்றுதான் நேரம் கிட்டியது. புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் எர்னெஸ்ட் ஹெமிங்வேயின் (The old man and the sea by Ernest Hemingway) படைப்பை தமிழில் எம்.எஸ் மொழிபெயர்த்திருக்கிறார். ஒரு கிழவனுக்கும் அவனது தூண்டிலில் அகப்படும் ராட்சத மீனுக்கும்(அயசடைை வகை) இடையேயான போராட்டம்தான் கதை. முழுக்க முழுக்க கடலில் நடப்பதால் வாசிப்பவர்களும் கடலில் பிரயாணம் செய்தது போன்ற அனுபவத்தை தருகிறது. 1952-ல் இந்தப் படைப்பு வெளியானபோது இருநாட்களில் 5.3 பில்லியன் பிரதி விற்றுத்தீர்ந்தது. இலக்கியத்திற்கான நோபல் பரிசும், புலிட்சர் விருதும் பெற்றது.

பலநாட்களாய் கடலுக்கு சென்று வெற்றுக்கையுடன் திரும்புகின்ற கிழவனுக்கு ஆறுதலாய் இருப்பது ஒரு சிறுவன். இன்றாவது நான் உன்னுடன் கடலுக்கு வருகிறேன் என்று சொல்லும்போது தடுத்துவிட்டு கிழவன் மட்டும் தனித்து பயணிப்பதில் ஆரம்பிக்கிறது கதை. நடுக்கடலில் தூண்டிலிட்டு மீனுக்காக காத்திருக்கையில் ஏதோவொரு பெரிய மீன் சிக்கிவிடுகிறது. அதன்பிறகு இருநாட்களாய் தனி ஆளாய் அந்த மீனுடன் (கிழவனின் படகைவிட பெரிய மீன்) போராடி அதைக்கொன்று, படகுடன் சேர்த்து கட்டிக்கொண்டு கரை திரும்பும் வழியில் அந்த மீனை சுவைக்க வரும் சுறாக்களுடன் மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கிறது. குத்தீட்டியால் சில சுறாக்களை கொல்வதும்,பின் ஒரு சுறா குத்தீட்டியுடன் தண்ணீரில் முழ்கியதும் தன்னிடமுள்ள கத்தியால் தாக்க வரும் சுறாக்களுடன் போராடுவதும் கிழவனின் வீரத்தை பறைசாற்றுகிறது.

அவ்வப்போது ”அந்தச் சிறுவன் இருந்தால் நன்றாய் இருந்திருக்குமே” என்று தனியே அரற்றுவதும்...தூண்டிலை இறுகப்பற்றியதால் இடது கை மரத்துப்போகையில் இடக்கையுடன் தனியே பேசுவதும் கிழவன் மீது ஒரு பரிதாபத்தை ஏற்படுத்தி விடுகிறது.

இருநாட்களாய் கடலில் உணவின்றி சிறுமீன்களை பிடித்து பச்சையாக தின்னும்போது ”நான் ஒரு முட்டாள்,அடுத்த முறை கண்டிப்பாக எலுமிச்சையும்,உப்பும் கொண்டுவரவேண்டும்” என்று புலம்புவதும் சோர்கின்ற போதெல்லாம் ”என்னால் முடியும் எத்தனை முறை வென்றிருக்கிறேன்”

என்று தனக்குத்தானே தைரியமூட்டிக்கொள்வதும் கிழவனின் மீது ஒரு ஈர்ப்பை உருவாக்குகிறது.

நடுக்கடலில் மீனுடன் நடக்கும் பலமணி நேர போராட்டத்திற்கு நடுவிலும் தன் நகரத்தில் நடக்கின்ற பேஸ்பால் போட்டியில் யார் வென்றிருப்பார்கள் என்று எண்ணுவதும், தன்னுடைய மனம் கவர்ந்த பேஸ்பால் வீரன் டிமாகியோ கால் ஆணியால் அவதிப்படுவதை பற்றி சிந்திப்பதும் கிழவனுக்கு பேஸ்பால் மீதிருந்த தணியாத ஆர்வத்தை மிக அற்புதமாய் எடுத்துரைக்கிறது.

அயல்நாட்டு இலக்கியத்தின் நடையையும், அந்த கடலோர மீனவர்களின் வலியையும் கதை முடியும் தருவாயில் உணர முடிகிறது. இது நாவலா சிறுகதையா என்கிற குழப்பத்தை கிழவனும்,சிறுவனும்,மீனும் மறக்கடித்துவிடுகிறார்கள். மொழிபெயர்ப்பு நூல் என்கிற எண்ணம் வெகு சில இடங்களில் மட்டுமே தோன்றுகிறது. வெகு நாட்களுக்கு பின் ஒரு நல்ல புத்தகம் படித்த திருப்தி.

கிழவனும் கடலும்
**ஆசிரியர்:** எர்னெஸ்ட் ஹெமிங்வே
**தமிழில்:** எம்.எஸ்
**பக்கம்:** 104
**விலை:** ரூ.50
காலச்சுவடு பதிப்பகம்

இணையத்தில் வாங்க:
http://www.anyindian.com/product_info.php?manufacturers_id=15&products_id=12008

நிலாரசிகன்
nilaraseegan@gmail.com

## தொடரும்... - சிற்றிதழ் அறிமுகம் - அம்சப்பிரியா

வாசகதளத்தில் நின்று ஒருவர் எத்தனை நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் வாசித்தாலும் பிறருக்கு எதையாவது சொல்ல வேண்டும் என்கிற தூண்டுதலும் தான் சொல்லத் தவறிய செய்தியை இன்னொரு படைப்பாளி மூலம் இந்த உலகிற்கு தெரிவிக்கும் பேராவலும் எழுகிறபோது ஒருவருக்கு அமைகிற வாய்ப்பு ஒரு இதழை துவங்கிவிடுவது தான்.

இலாப, இழப்புகளைக் கடந்து, புதிய செய்திகளை உரத்துச் சொல்கிற தன்மையோடு சிற்றிதழ்கள் வருகை நிகழ்கின்றன. உலகம் தோன்றிய நாள்முதல் பிறருக்குச் சொல்வதற்கு எப்படி செய்திகள் இருக்கின்றனவோ அதுபோலவேதான் படித்து உணரவும், கேட்டு கொண்டு இருக்கவும் புதிய புதிய கருத்துக்களின் தேவையும் எழுகிறது.

இன்றைக்கு இப்பணியை செவ்வனே செய்துவரும் ஒரு சில இதழ்களில் "தொடரும்" இதழும் ஒன்று. ஆய்வுக் கண்ணோட்டத்தில் மிளிர்ந்திருக்கும் கட்டுரைகள் ஆய்வு மாணவர்களுக்கும், கட்டுரையின் புதிய வாசிப்பாளர்களுக்கும் மிகவும் பயனுள்ள இதழாக உள்ளது."நமது முன்னோடிகள்" என்ற பகுதி இலக்கிய ஆளுமைகளை நமக்கு அறிமுகப்படுத்துகிறது.

கவிதைகள் தான் ஓர் இதழின் முதன்மைவாசிப்புக்கு தகுதியானதாக இருக்கிறது. மொழிபெயர்ப்புக் கவிதைகளும், மற்ற கவிதைகளும், கவிதை ஆர்வலர்களின் விருந்தாக அமைகிறது. மொழிபெயர்ப்பு சிறுகதைகளும் உண்டு. கவிஞர்களை அறிமுகப்படுத்தும் "கவிமுகம்" சிறந்த பகுதி. இதை இன்னும் கூட விரிவாகச் செய்யலாம்.

இதழின் நாற்பது பக்கங்களில் பெரும்பகுதி கட்டுரைகள். அந்தக் கட்டுரைகள் வாசகர்களுக்கு அவசியமானதையும், சிந்திக்கத் தூண்டும் விதமாகவும், கருத்து நுட்பம் வாய்ந்ததாகவும் இருப்பது இதழின் நோக்கம் ஆரோக்கியமானது என்பதைச் சொல்லாமல் சொல்கிறது.

பாரதியின் கம்பீரமான தோற்றம், இதழின் முத்திரையாக இருக்கிறது. அட்டைப்படம் வண்ணமயமாகவும், படைப்பாளிகளை அறிமுகப்படுத்தும் விதமாகவும் உள்ளது.

தரமான படைப்புகளை தேடிப் படிப்பவர்களுக்கும், தரமான படைப்புகளை கொடுக்க நினைக்கும் படைப்பாளிகளுக்கும் நண்பனாக இருக்கிறது இதழ்.

“தொடரும்” இதழ் தொடர, நம் கரங்களின் ஆதரவு தொடரட்டும்.

இருபதாண்டுகளாக தொடர்ந்து வருவதே பெரும் சாதனைதான். இதழின் பெயரே “தொடரும்” என்கிற போது தொடரத்தானே வேண்டும்.

**இதழ்:** தொடரும்
**ஆண்டு சந்தா:** ரூ.60
**தொடர்புக்கு:** கண்ணன் அச்சகம்
நாடார்பேட்டை
சிங்கம்புனரி- 630502